# எல்லை கடந்த ஒத்துழைப்பு குறித்து இந்தியா மற்றும் மியான்மார் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது

**மே 10,2014**

எல்லை கடந்த ஒத்துழைப்பு குறித்து இந்தியா மற்றும் மியான்மார் தங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (ஆர்.பி.ஐ) கையெழுத்திட்டது இந்த ஒப்பந்தம் மே 08,2014இல் நேபிடாவில் திரு. கௌதம் முகோபாத்யா,மியன்மாருக்கான இந்திய தூதர் மற்றும் மேஜர் ஜெனரல் கியாவ் நியுந்த்,மியன்மாருக்கான பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரால் கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியா மற்றும் மியான்மார் இடியாயிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு முகவர்களுக்கு இடையே தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு கட்டமைப்பை வழங்குகிறது. அந்தந்த பக்கங்களின் சர்வதேச எல்லைகளில் மற்றும் இரு நாடுகளின் ஆயுதப்படைகளின் கடல் எல்லைகளில் ஒருங்கிணைந்த ரோந்துகள் நடத்துவது இதில் ஒரு முக்கிய விதியாகிறது. இரு தரப்பும் கிளர்ச்சி, ஆயுத கடத்தல், போதை மருந்து, மனித மற்றும் வன கடத்தல் எதிரான போராட்டத்தில் தகவல்களை பரிமாறி கொள்ள ஒப்புக்கொண்டுள்ளது. இருதரப்பும் எல்லை தாண்டிய சட்டவிரோத நடவடிக்கைளை தடுக்க நடவடிக்கை எடுக்கவும் ஒப்புக்கொண்டுள்ளது. ஆயுதப்படைகள், மருந்து கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் வனவிலங்கு குற்ற கட்டுப்பாட்டு முகவர்கள்

இடையிலான  கூட்டங்களின் நிலை மற்றும் அதிர்வெண் பற்றி இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையே நீண்ட சர்வதேச நிலம் மற்றும் கடல் எல்லையில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு உறுதி செய்ய இந்தியா மற்றும் மியான்மார் பாதுகாப்பு முகவர்களுக்கு இடையே மேம்பட்ட மற்றும் உறுதியான ஒத்துழைப்பை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புது டில்லி,**

**மே 10,2014**